# ஈழநாடு
THE EELANADU

விலை: சதம் 60

மலர் 23 | வைகாசி 27 | ஷஃபான் 5 | இதழ் 114

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 8-6-1981


## ரயில் விபத்து: 200 பேர் பலி!

புதுடில்லி, ஜூன் 7

இந்தியாவின் வடமாநிலமான பீகாரில் ரயிலொன்று ஆற்றில் விழுந்ததால் இருநாற்றுக்கும் அதிகமானவர்கள் பலியானார்கள்!

இந்த ரயிலிலுள்ள ஏழு பெட்டிகள் ஹோசி ஆற்றில் மூழ்கியது என்று அறிவிக்கப்பட்டது.

ஆற்றிலிருந்து பத்து சடலங்கள் மீட்கப்பட்டன. ஏனைய சடலங்களை மீட்பதற்கு சுழியோடிகள் விபத்து நடந்த இடத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

### மின்விநியோக நெருக்கடியின் எதிரொலி!

# அரச கைத்தொழில்கள் மூடப்படுகின்றன!

(நமது கொழும்பு நிருபர்)

மின்சார வெட்டின் எதிரொலியாக மேலும் பல அரசு—தனியார் துறை கைத்தொழில் நிலையங்கள் இவ்வாரம் மூடப்படும் என்று அஞ்சப்படுகிறது! இதுசம்பந்தமான இறுதி முடிவு, இன்று மின்சாரசபை கூட்டும் மகாநாட்டில் எடுக்கப்படும்.

மின்சார விநியோகம், மிக நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியிருப்பதால்மேலும் பல அரசதுறைகைத்தொழில்களும் தனியார்துறை கைத்தொழில்களும்கூட மூடப்படக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

மின்வெட்டைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் இந்த முடிவை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருப்பதாக அறியப்படுகின்றது.

இன்று மின்சாரசபை கூட்டும் மகாநாட்டில் கைத்தொழில்களை மூடுவது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும்.

இதற்கிடையே காஸல்றி, மவுசாகலை நீர்த்தேக்கங்களில் பருவ மழை பெய்யாமையால் இன்னும் பத்து நாட்களுக்கு போதக்கூடிய மின்சாரம் மட்டுமே கையிருப்பில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மின்வெட்டு நேரத்தை மேலும் நீடிக்க வேண்டுமா என்பது பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க மின்சார உற்பத்தி இயந்திரங்கள் மீது தற்போது விதிக்கப்படும் 5 வீத இறக்குமதி வரியை நீக்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## 'தியாகர்' மரண விசாரணை இன்று நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான முன்னாள் வட்டு எம்.பி. கலாநிதி ஆ. தியாகராசாவின் மரணவிசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் இன்று நடைபெறவிருக்கிறது. (க)

## யாழ். நகரில் மதத்தலைவர்கள்

[அரியாலை]

நான்கு மத பீடத்தலைவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கர்தினால் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, கொழும்பு திருமண்டலப் பேராயர் சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகலை திருமண்டலப் பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா ஆண்டகை, இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு. சோமா பெரேரா அடிகளார் ஆகியோரே யாழ்ப்பாணம் வந்துள்ள மதபீடத் தலைவர்களாவர்.

திருச்சபைகளின் தலைவர்களடங்கிய மகாநாடொன்று யாழ். கத்தோலிக்க திருமறை மாவட்ட பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

## மலேசிய அழகி கொலை: மரணதண்டனை பெற்ற கார்த்திகேசு விடுதலை

[கோலாலம்பூர்]

முன்னாள் மலேசியா அழகுராணி ஜின் பெரேரா கொலை வழக்கில், மரண தண்டனை பெற்ற அவரது மைத்துனரான விரிவுரையாளர் எஸ். கார்த்திகேசு, மலேசியா சமஷ்டி நீதிமன்றத்தினால் விடுதலைசெய்யப்பட்டார்.

விரிவுரையாளர் கார்த்திகேசு யாழ்ப்பாணம் பண்ணாகத்தைச் சேர்ந்தவர்.

மரணதண்டனை பெற்ற கார்த்திகேசுவின் அப்பீல்மனு சமஷ்டி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் முக்கிய சாட்சியான பி. ஜெயதிலகா, விசாரணையின்போது பொய்ச்சாட்சியம் அளித்ததாக ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

கடந்த வருடம் ஜூலைமாதம் நடந்த கொலை வழக்கு விசாரணையில் தாம் பொய்ச்சாட்சியம் அளித்ததாக முக்கிய சாட்சியான விற்பனையாளர் ஜெயதிலகா கூறியதை உண்மை கூறுவதாக நீதிமன்றம் திருப்திப்படுவதாக சமஷ்டி நீதிமன்ற நீதியரசர் சுலைமான் தெரிவித்தார்."

நீதியரசர்கள் சுலைமான், அப்துல் ஹமீத, சுச்சிராயூப்சனிப் ஆகியோர் முன்னிலையில், கார்த்திகேசுவின் அப்பீல் மனு விசாரணை நடைபெற்றது.

## காங்கேசன்-கொழும்பு இரவு ரயில் சேவை

[யாழ்ப்பாணம்]

பிரயாணிகள் குறைவு காரணமாக கடந்த சில தினங்களாக நிறுத்தப்பட்டிருந்த கொழும்பு - காங்கேசன்துறை இரவு ரயில்சேவை, நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [க]

## இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

பொலிஸ்சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

## அறிவித்தல்

'ஈழநாடு' விளம்பர சேவை வழமைபோல் நடைபெறும்.

— நிர்வாகி

## தணிக்கை

நாடு முழுவதும் அவசரகால நிலைமை அமுலில் இருப்பதால் செய்திகள் தணிக்கை செய்ய படுகின்றன.

## வரிவிளம்பரம்

**LAWYER**

Required as Assistant to a Practitioner in Jaffna. Please apply to: R P Sabaratnam, Attorney-at-Law, 43, Arasady Road, Jaffna.
0002

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அச்சகமொன்றுக்கு Cylinder Plating அச்சியந்திரங்களில் வேலைசெய்யக்கூடிய மெசின் மைண்டர் தேவை. அத்தோடு எழுத்துக்கோப்போரும் தேவை. அனுபவம் பற்றிய விபரங்களோடு விண்ணப்பிக்கவும். போதிய ஊதியம் வழங்கப்படும். பாரதிமா மின் அச்சகம், அக்கரைப்பற்று.
0003


பாலர் வகுப்பில் அனுமதி:

# இம்மாதம் 30ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

1982-ம் ஆண்டு முதலாம் தவணையில் பாலர் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்க்க கோரும் விண்ணப்பங்கள் 1981 ஜூன் 30 ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

பாலர் வகுப்பில் சேர்க்கப்படும் பிள்ளைகளின் வயது 1982-ம் ஆண்டு ஜனவரி 31-ம் திகதியில் ஐந்து வயது பூர்த்தியடைந்ததாக இருக்கவேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## எகிப்து தலையிடாது

டெல் அவிவ் ஜூன் 7

லெபனானிலுள்ள சிரிய ஏவுகணைத் தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் எகிப்து தலையிடாது என அதிபர் அன்வர் சதாத் வாக்குறுதி அளித்திருப்பதாக இஸ்ரேலிய பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தும் இஸ்ரேலிய பிரதமர் பெகினும் அண்மையில் நடத்திய பேச்சுக்களின்போது இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டதாம்.

## பங்களாதேஷ் ஜனாதிபதி படுகொலை: விசாரணைக் கமிஷன் நியமனம்!

டாக்கா, ஜூன் 7

பங்களாதேஷ் ஜனாதிபதி ஷியாவுல் ரஹ்மான் படுகொலை பற்றி விசாரணை செய்ய குழுவொன்றை பங்களாதேஷ் அரசு நியமித்துள்ளது.

இக்குழுவில் பங்களாதேஷ் பிரதம நீதியரசர் உட்பட பல நீதியரசர்கள் இடம்பெற்றுள்ளனர். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி விடுத்த கோரிக்கைக்கு அமையவே இவ்விசாரணைக்குழுவை அரசு நியமித்துள்ளது.

இப்படுகொலைக்கு பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சிகள் அரசைக் கேட்டுள்ளன.

# இந்திரா காங்கிரஸில் வை.பி சவான்

புதுடில்லி, ஜூன் 7

இந்திய முன்னாள் அமைச்சர் திரு வை பி சவான் இந்திரா காங்கிரஸில் சேருவது பற்றிய தமது விருப்பத்தை பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருமதி இந்திரா காந்தியின் பதிலை தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் திரு. சவான் நிருபர்களிடம் தெரிவித்தார்.

திருமதி இந்திரா காந்தியை சந்திக்கும் எண்ணம் தற்போது தமக்கு இல்லையென்றும் திரு. சவான் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் தான் உண்மையான ஜனநாயகக்கட்சியென்றும், அது கடந்த முப்பது ஆண்டுகளாக ஜனநாயகக் கொள்கைகளை பின்பற்றி வருகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

# சிரியா துருப்புக்கள் வாபஸாக வேண்டும்!

## எகிப்திய ஜனாதிபதி சதாத் யோசனை

கெய்ரோ, ஜூன் 7

லெபனானில் ஏவுகணைகள் சம்பந்தமான பிரச்னை தீர்க்கப்படுவதற்கு, அங்கிருந்து சிரியா துருப்புக்கள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

லெபனானின் தற்போதைய நெருக்கடி நிலைக்குக்காரணம் சிரியாவும், இஸ்ரேலுமே என்று அவர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு பிரச்னையைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவின் விசேட தூதுவர் திரு. பிலிப்ஹபீப் எடுத்துவரும் முயற்சிகளுக்கு அவகாசமளிக்க வேண்டுமென்றும் அவர் மத்திய கிழக்கு நாடுகளைக்கேட்டுள்ளார்.

# பண்ணைக்கடலில் இளைஞர் மரணம்!

## சிநேகிதர்களுடன் மீன் பிடிக்கச் சென்றதாக விசாரணையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

பண்ணைக்கடலில் மீன்பிடிக்க,சிநேகிதர்களுடன் சென்ற இளைஞர் நீரில் மூழ்கி மரணமானார்.

அரியாலையைச்சேர்ந்த 28 வயதான ஜோன் அன்ரனி பெர்னாண்டோவின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்.மரணவிசாரணை அதிகாரி திரு எஸ், எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

மின்நெசவாலையில் சாயம் போடுபவர், நண்பர்களுடன் மீன் பிடிக்கச்சென்று வள்ளமொன்றில் சறுக்கி கடலில் விழுந்ததாகவும், நண்பர்கள் அவருக்கு உதவுமாறு கூக்குரல் எழுப்பியும், பலமான காற்றுக் காரணமாக எவரும் முன்வரவில்லையென்றும் மறுநாள் அவரது சடலம் வலையொன்றுடன் கடலோரத்தில் காணப்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

இச்சம்பவம் பற்றி உடனே பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணையின்பின் விபத்து மரணம் எனத்தீர்ப்பளித்தார். (ஈ)

## ஆலயத்திருவிழா பகலில் நடக்கும்

(மாவிட்டபுரம்)

வலிவடக்கில் ஆலய திருவிழாக்கள் யாவும் பகலிலேயே முடிவடையக்கூடிய விதத்தில் ஆலயநிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

# கடற்றொழிலாளி சுருக்கிட்டுத் தற்கொலை

## கடனைத் தீர்க்க கஷ்டப்பட்டதாக விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

வீடு கட்டவும், வள்ளம் வாங்கவும்கடன்பட்டு கடனைத் தீர்க்கமுடியாமல் கஷ்டப்பட்ட கடற்றொழிலாளி ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார்!

ஆரியவளையைச் சேர்ந்த 24 வயதான முத்து கிருஷ்ணசாமியின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

சம்பவம் நடந்ததினம் மனைவி அவரைச் சாப்பிடும்படி கூறியதாகவும், பின்னர் அவரை காணவில்லை என்று தேடியதாகவும், அறைபூட்டியிருந்ததால் அதனைப் பலவந்தமாகத் திறந்தபோது அவர் வளையில் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்கும் பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மரணவிசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஈ)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# சீதனத் தகராறு: மனைவி தற்கொலை

(மாவிட்டபுரம்)

வாக்குறுதியளித்தபடி சீதனம் கொடுக்க தாமதம் ஏற்பட்டதால் இளம் கணவன்-மனைவிக்கிடையில் தகராறு ஏற்பட்டு மனைவி நஞ்சிடம் தஞ்சம் புகுந்த பரிதாப சம்பவம், வசாவிளானில் இடம் பெற்றுள்ளது.

19 வயதுடைய நவரத்தினம் இராசமலர் என்னும் இளம் பெண்ணே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்.

நெல்லியடியைச்சேர்ந்த நவரத்தினம் என்பவரை மேற்படி பெண்மணி அண்மையில் திருமணம் செய்திருந்தார். இவருக்கு சீதனமாக வீடு, வளவு, நகை, பணம் என்பன தருவதாக அவரது சகோதரர் உறுதியளித்திருந்தார். இதன்படி திருமணத்தின்போது வீடு, வளவு வழங்கப்பட்டது நகையும், பணமும் விரைவில் தருவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. இவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் குடும்பத்தில் சச்சரவு எழுந்தது காலமானவர் தமது சகோதரரிடம் இவற்றை விரைவில் தருமாறும் குடும்பத்தில் தமக்கு கரைச்சல் இருப்பதாகவும், தராது விட்டால் தாம் நஞ்சருந்தவேண்டிய நிலை தான் ஏற்படுமென்றும் கூறியிருக்கிறார். பின்பும் இவை வழங்கப்படாமையால் இவர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தார்.

இந்த விபரங்கள் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் செல்வி தர்மராணி காசிப்பிள்ளை பிரேத பரிசோதனை செய்து சாட்சியமளித்தார்.

இறுதியில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

# தேக்கும் நீரை கமத்திற்கு பயன்படுத்துவது சரியா?

கோடை காலத்தில் விவசாயத்திற்குத் தேவையான நீரைப் பெறமுடியாது கிணற்று நீரையே உபயோகிக்க வேண்டி ஏற்படுகின்றது.

இவ்வாறு விரைவில் ஏரி நீரை விரயமாக்குவதால், கோடை காலத்தில் கிணற்று நீர் வற்றிப் போகின்றது. கடல் நீர் உந்தி மேலோங்கி நில நீரை உவராக்குகின்றது. கடல் நீரை அமுக்கி அகற்றுவதற்கு ஏரியில் நன்னீரும் இல்லாது போய்விடுவதனால் உவர்த்தன்மை அதிகரித்து நன்னீர் வளத்தை மட்டுமன்றி, மண்வளத்தையும் உவராக்குகின்றது.

## யாழ். குடாநாட்டில் நீர்வளத்தைப் பேண சில யோசனைகள்-2

(இ) விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் ஏரிகள்

சில ஏரிகளின் நீர் விவசாயப் பாவனைக்காகப் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம்.

சாதாரணமாகப் பிறக்காய்க்குளம், பன்னைக்குளம் போன்ற ஏரிகளின் நீர் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுவதை நாம் காணமுடிகின்றது.

இவ்வேரிகளில் தேக்கப்படும் நீரை நாம் விவசாயத்திற்காக நீர் இறைத்தல் அவசியமா என்பதைஆராய்தல்வேண்டும்.

அநேகமாக யாழ் குடாநாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் ஏறக்குறைய 125,000 கிணறுகள் ஊடாகவே வீட்டுத் தேவைக்கும், விவசாயத் தேவைக்கும் வேண்டிய நன்னீரைப் பெறுகின்றோம் எமது குடாநாட்டின் புவியமைப்பு பரந்த ஆழமான குளங்களை அமைத்துக்கொள்வதற்கு இடமளிக்காது. மழைகாலத்தில் சேமிக்கப்படும் ஏரி நீரை விவசாயத்திற்காக விரைவில் நீர் இறைக்கும் இயந்திரங்களினூடாக விரயமாக்குவது யாழ் குடாநாட்டிற்கு ஏற்றதல்ல.

ஆகவே விவசாயத்திற்காக நாம ஏரி நீரைப் பாவியாது விடுதல் விரும்பத்தக்கது. தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமேயன்றி ஏரிநீர் வற்றிவிடுமளவு தினமும்இறைத்தல்கூடாது கூடிய நீரை ஏரிகளில் தேக்குதலவேண்டும். கோடைகாலத்தில் ஏரிநீர் நிலநீருக்குப் பயனைக்கொடுக்கப் பண்ணுதல்வேண்டும். விவசாயத்திற்குத் தேவையான நீரை கிணறுகளின்மூலம் பாவித்தல் அவசியம். சுற்றுட்டில் அமைந்துள்ள கிணற்று நீருக்கு ஏரியின் நீர் அமுக்கத்தைக் கொடுக்கும் வகையில் ஏரிநீரைப் பேணுதல்வேண்டும்

விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஏரிகளில் பெரு விரைவில் வரட்சியை காணக்கூடியதாக இருக்கின்றது அநேகமாக ஆவணி, புரட்டாதி மாதங்களில் இவ்வேரிகளில் மாட்டுவண்டிச் சவாரிகள்கூட நடத்துவதைக் காணமுடிகின்றது. அதற்கேற்ற வரட்சி நிலையைக்கூட இவ்வேரிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வேரிகளை எவ்வாறு நாம் பயன்படுத்தலாம்?

1 அடிச்சேற்று மண்ணை அகற்றி உடன் புனர் அமைத்தலவேண்டும்

2 நீர் இறைக்கும் இயந்திரங்கள மூலம் நீர் இறைப்பதைத் தடைசெய்தல்வேண்டும்

3 நீர் ஆவியாகுதலை தடுக்கும் முகமாக தாமரைபோன்றவற்றை ஏரியில் நடுதல் வேண்டும்.

4. ஏரியின் சுற்றுட்டில் பனை, வேம்பு, இலுப்பை போன்ற மரங்களை நடுதல் வேண்டும்.

5 ஏரியினுள் கிணறுகள் அமைத்தல்வேண்டும் (இவை கூடுதலாக நில நீருக்கும் ஏரி நீருக்கும் தொடர்பை ஏற்படுத்த உதவும்) அத்துடன் இக்கிணறுகளில் இருந்து விவசாயத்திற்கோ அல்லது குடிநீர் விநியோகத்திற்கோ நன்னீர் பெறமுடியும்.

(ஈ) ஒருவித பாவனைக்கும் பயன்படுத்தப்படாத ஏரிகள் கழிவுநீரைத் தேக்கும் ஏரிகளும், உரிஞ்சித்தொளைகளும்.

யாழ் குடாநாட்டின் சில ஏரிகளின் நீர் ஒருவித பாவனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை காரணம் இவ்வேரிகளின் தேக்கப்படும் மழை நீருடன் சுற்றுடலில் இருந்துவரும் கழிவுநீரும் சேருகிறது தொழிற்சாலைகளில் இருந்தும், மருத்துவ பீடங்களில் இருந்தும் தினமும் ஓடும் கழிவுநீர் சில ஏரிகளில் தேக்கப்படுகிறது.

இவ்விதம் கழிவுநீரைத் தேக்கும் ஏரிகளை (உதாரணமாக யாழ். நகரில் பல உள்ளன) புனர் அமைக்கும்பொழுது 'ஆ'வில் குறிப்பிட்டிருப்பது போல புனர் அமைத்தல் வேண்டும். நிலநீருக்கும் ஏரிநீருக்கும் தொடர்பு அற்றதாகவே இவ்வேரிகளை அமைத்தல்வேண்டும் இவ்வேரிகளில் தேங்கி நிற்கும் நீரை பவுஸர்கள் மூலம் அகற்றி கடலில் சேர்த்தல் விரும்பத்தக்கது.

எக்காரணம் கொண்டும் இவ்வேரிகளின் களிமண்டலத்தை அகற்றல் கூடாது!

### உரிஞ்சித் தொளைகள்

இயற்கையாக அமையப்பெறும் இந்நிலப் பதிவுகளில் தேக்கப்படும் நீர் ஒருவித பாவனைக்கும் உட்படுத்தப் படாமல் இருப்பின் இவ்வேரி நீரை நில நீருடன் சேரும் வண்ணம் ஏரியை நன்கு ஆழமாக்குதல் அவசியம். இவ்வேரிகளை நில நீருக்கு மட்டுமே பிரயோசனத்தை அளிக்கும் முகமாக, ஆழப்படுத்தி நீர்த் தேக்கத்தை அதிகரித்தல் நன்று. இவ்வேரி நீரால் நில நீருக்கு அமுக்கத்தைக் கொடுக்கப்பண்ணுதல்வேண்டும்.

(உ) கால்நடைகளின் பாவனைக்கு அமைக்கப்பட்ட ஏரிகள்

கால்நடைகளின் தேவைக்காகப் பல ஏரிகள் அமைக்கப்பட்டுள்ளன இந்தப் பாலைவன வெளிகளில் கால்நடைகளின் பாவனைக்காக இவ்வேரிகளில் கோடை காலத்திலும் அதிக நீர்த் தேக்கம் தேவைப்படுமாதலால் இவ்வேரிகளின் அடித்தளத்தில் இருக்கும் களிமண்டலத்தை முற்றாக அகற்றல் கூடாது இவ்வித ஏரிகள் கூடுதலாக வடமராட்சிப் பகுதியின் பாலை நிலங்களில் காணப்படும் நீர் ஆவியாகுதலைத் தடுக்கும்முகமாக ஏரியின் சுற்றுடலில் மரங்களை நடுதல்வேண்டும் இவ்வித ஏரிகளினால் நில நீருக்குக் கிடைக்கும் நன்மை மிகவும் குறைவாகினும், இவ்வித ஏரிகளும் எமது குடாநாட்டிற்கு மிகவும் அவசியம்

நில நீரின் கூடுதலான சேமிப்புக்கு நாம் செய்யவேண்டியவை

1 தாழ்மையம் இருக்கும் ஏரிகளை ஆழப்படுத்திக் கூடுதலான மழை நீரைத் தேக்குதல் வேண்டும்

2. புதிய ஏரிகள் அமைத்தல்வேண்டும். (உவர் நீர் அதிகரிப்புஉள்ள வட்டுக்கோட்டை துன்னாலை போன்ற இடங்களில் இருக்கும் உவர் நிலங்களில் இவ்வேரிகளை அமைத்துக் கொள்ளலாம்.

3, வெள்ளக் காலங்களில் மழை நீர் கடலை நோக்கி முற்றாக ஓடவிடாது கூடிய நாட்களுக்குத் தரிசு நிலங்களில் நீரைத் தேக்கி வைத்தல்வேண்டும்.

4 வரம்புகளைக் கட்டி மழைநீரைச் சில நாட்களுக்கு வீட்டுத் தோட்டங்களில் தங்கப்பண்ணல்வேண்டும்

5. ஏரிகளின் நீர் ஆவியாவதைக் குறைக்கும் முகமாகத் தாமரைக் கிழங்குகளை ஏரிகளில் நடுதல்வேண்டும்.

6 ஏரிகளின் கரையோரங்களில் வேம்பு இலுப்பை, பனை போன்ற மரங்களை நடுதல்வேண்டும்.

7 மழைக் காலத்தில் வழுக்கையாற்றில் ஓடும் நீரை வெகுவிரைவில் கடலை நோக்கி ஓடவிடாது தேங்கப்பண்ணுதல்வேண்டும்

8 தொண்டைமானாறு, உப்பு ஆறு போன்றவற்றில் மழை நீருடன் கடல் நீர் சேரா வண்ணம் பாதுகாத்து கூடிய காலத்திற்கு இவ் ஆறுகளில் மழை நீரைத் தேங்கப்பண்ண வேண்டும்

9. யாழ். குடாநாட்டில் நில நீர்ச்சேர்க்கையின் மூன்றில் இரண்டுபங்கு நில ஊற்றாக கடலை நோக்கி ஓடும் இடங்களில் கீரிமலை, சடையம்மா மடம்) அணைகட்டு அமைப்பதற்கு பொதுநல சேவைப் பிரியர்களின் பிரயாசை அவசியம்

நிலநீர் சேமிப்பின் கூடிய பயனைப் பெற நாம் செய்ய வேண்டியவை;-

1. தேவையை அறிந்து அளவுக்கு மீறுமல் நன்னீரைப் பாவிக்க வேண்டும்.

2. குடிப்பதற்கென வழங்கப்படும் நன்னீரை வேறு தேவைகளுக்கு விரயம் செய்யாது பேணுதல் வேண்டும். (இன்னுமோர் கிராமத்திற்கு சொந்தமான நன்னீரையே குடிப்பதற்கென நகர்ப்புற மக்களுக்கு குழாய் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றது.)

3. கூடுதலான வெப்பநேரத்தில் (காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை) விவசாயத்திற்கான நீர் இறைப்பைத் தவிர்த்தல் வேண்டும்.

4. அதிக சக்தியுடைய நீர் இறைக்கும் இயந்திரங்களின் பாவனையை தவிர்த்தல் வேண்டும்.

5 கிணற்றிலிருந்து, நீரை இழுக்கும் 'புட்வால்வ்'வை கிணற்று அடித்தளத்திலிருந்து குறைந்தது 9 அங்குல உயரத்தில்வைத்து இறைத்தல் வேண்டும். இதனால் கிணற்றின் நீரை முற்றாக இறைக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றது.

6 கோடை காலங்களில் கிணறுகளிலிருந்து தொடர்ச்சியாக கூடிய மணி நேரத்திற்கு நீர் இறைப்பைத் தவிர்த்தல் வேண்டும்.

7. தேவைக்கு மேலாக கிணறுகளை ஆழமாக்குதலைத் தவிர்த்தல் வேண்டும் (இடத்திற்கேற்றவாறு ஆராய்ந்து கிணறு வெட்டுதல் வேண்டும், இதற்கான ஆலோசனைகளை யாழ் நீர்ப்பாசன இலாகாவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.)

நன்னீர் இருப்பின் அளவை அறிந்து நமது விவசாயத்தை மேற்கொள்ளல் விரும்பத்தக்கது.

நன்றி: மில்க்வைற்

– த. குணசேகரம் –

(தொழில்நுட்பப் பொறியியலாளர் வடபிராந்திய நீர்வளச் சபை)

---

## 225பேருக்கு உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானம்

(மாவிட்டபுரம்)

வசாவிளான் ஒட்டகப்புலம் பங்கைச் சேர்ந்த 225 க்கு மேற்பட்ட கிறிஸ்தவர்களுக்கு உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானத்தை யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை அடிகள் நிறைவேற்றி வைத்தார்.

ஒட்டகப்புலம் அமலோற்பவமாதா கோவிலில் இடம்பெற்ற வருடாந்த வணக்கமாதத் திருவிழாவிலேயே இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இடம்பெற்றது

இதனுடன் கூட்டுப்பாடல் பூசை, அமலோற்பவமாதாவின் திருச்சொரூப பவனி, அன்னதானம் என்பனவும் இடம்பெற்றன அவ்வூர் நாட்டுக்கூத்துக் கலைஞர்களால் "ஸ்தாக்கியர்" என்னும் நாடகமும் மேடையேற்றப்பட்டது.

---

## அக்குபஞ்சருக்கு கௌரவம்

(கொழும்பு)

சீனாவில் பிரபல்யமான அக்குபஞ்சர் முறைக்கு இலங்கையில் கௌரவமளிக்கப்படவிருக்கிறது இந்த வைத்திய முறை இப்போது இலங்கையிலும் பிரபல்யமடைந்துள்ளது.

இந்த வைத்திய முறையை கௌரவிக்கும் முகமாக இலங்கையில் வெளியிடப்படவிருக்கும் முத்திரையில் அக்குபஞ்சர் ஊசியும் சின்னமும் இடம் பெற்றிருக்கும். அக்டோபர் 19ம் திகதி இந்த முத்திரை வெளியிடப்படும்.

## உணவு முத்திரை திருட்டு

[கண்டி]

கடுகண்ணாவை, யட்டிநுவர உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 90,156 ரூபா பெறுமதியான 600 உணவு முத்திரைகளும் மற்றும் பொருட்களும் களவு போய் விட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [து]

மா. அ. சபை தேர்தல் வாக்களிப்பு:

# தகுதி பெற்ற வாக்காளர்: 44 லட்சம்; வாக்களித்தவர்கள்: 22 லட்சம்

[கொழும்பு]

மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தலில், 50சதவீதத்துக்கும் மேலானவர்கள் வாக்களிக்கவில்லை.

யாழ்ப்பாண மாவட்டம் தவிர்த்து, தேர்தல் முடிவுகள் வெளியான 16 மாவட்டங்களிலும், 44 லட்சத்து 68 ஆயிரத்து 473 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர். இவர்களில் 22 லட்சத்து 29 ஆயிரத்து 680 பேர் மாத்திரமே வாக்களித்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் மொத்தவாக்குகள் 9லட்சத்து 11 ஆயிரத்து 215. பதிவான வாக்குகள் 3 லட்சத்து 57ஆயிரத்து 722 மாத்திரமே.

ஏனைய மாவட்டங்களிலும் பெரும்பாலான வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்று தேர்தல் முடிவுகளிலிருந்து தெரியவருகிறது. [து]

## மா. அ. சபைத் தலைவர்களுக்கு கடமைப்பயிற்சி

[கொழும்பு]

அபிவிருத்திச்சபைத்தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் அவர்களின் கடமைகள், வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

அடுத்த மாதம் 20-ந் திகதி அபிவிருத்திச் சபைகளின் முதல் கூட்டம் நடைபெறும். இப்பயிற்சி இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகும்.

இப்பயிற்சி தொடர்பான கருத்தரங்கில் ஜனாதிபதியும் பிரதமரும் முதலில் உரை நிகழ்த்துவர். தொடர்ந்து அபிவிருத்திச் சபையுடன் சம்பந்தப்பட்ட 12 அமைச்சர்களும் உரையாற்றுவர்.

இக்கருத்தரங்கில் அபிவிருத்திச் சபைத் தலைவர்களும் உறுப்பினர்களும் மாவட்ட அமைச்சர்களும் கலந்து கொள்வர்.

சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில்

## பலாப்பழம், மாம்பழம் விலையில் திடீர்ச் சரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் மாம்பழம்,பலாப்பழங்களின் விலை வெகுவாகக் குறைந்துள்ளது.

வெளியூர் வியாபாரிகள் வராததினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

25 ரூபாவரை விற்பனையான பலாப்பழத்தின் விலை 10 ரூபாவாகவும், 2 ரூபா விற்ற மாம்பழங்களின் விலை 75 சதம் முதல் 90 சதம் வரையும் குறைந்துள்ளது.

விற்பனையாகாத மாம்பழம், பலாப்பழங்களை சிலர்திருப்பிக் கொண்டுசென்றனர். (க)

## சுவிஸ்பொருட்காட்சியில் இலங்கைக்கு கௌரவம்

[கொழும்பு]

சுவிற்சர்லாந்தில் நடைபெறவிருக்கும் தேசிய பொருட்காட்சியில் இலங்கைக்கு "கௌரவ விருந்தினர்" அந்தஸ்து வழங்கப்படவிருக்கிறது.

இப்பொருட்காட்சி செப்டம்பர் 12-ம் திகதி ஆரம்பமாகி பதினாறு நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றும் தொகையினர் 2500 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம், பண்பாடு, உல்லாசப்பயணத்துறை சம்பந்தப்பட்ட துறைகள் இப்பொருட்காட்சியில் இடம்பெறவுள்ளது.

## அதிகாரங்கள் மாற்றப்படும்

[கொழும்பு]

கிராமசபை, பட்டினசபைக்கு உள்ள அதிகாரங்கள் யாவும் ஜூலை மாதம் முதலாந் திகதி முதல் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு மாற்றப்படும்.

## முதல் கூட்டம் ஜூலை 20-ல்

[கொழும்பு]

மாவட்ட அபிவிருத்தி சபைகளின் முதலாவது கூட்டத்திற்கு அந்தந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவரே தலைமை வகிப்பார்.

அபிவிருத்தி சபையின் முதலாவது கூட்டம் ஜூலை 20-ம் திகதி அந்தந்த மாவட்டச் செயலகங்களில் நடைபெறும். [அ]

## மரண விசாரணை இன்று நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

நாச்சிமார் கோவிலில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பொலிஸ் சார்ஜன்ட் புஞ்சி பண்டாவின் மரண விசாரணை யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதனின் முன்னிலையில் ஆரம்பமானது.

நீதவான் ரி. ஜோகநாதன் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனை நடத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பணித்து விசாரணையை இன்று காலை வரை ஒத்திவைத்தார்.

## பொலிஸ் சார்ஜன் இறுதி ஊர்வலம் மீசாலையில் நடந்தது

[யாழ்ப்பாணம்]

நாச்சிமார் கோவிலடி துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பொலிஸ்சார்ஜன்ட் கனகசுந்தரத்தின் இறுதி ஊர்வலம், அவரது சொந்த ஊரான மீசாலையில் நடைபெற்றது.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையுடன் இறுதி ஊர்வலம் நடைபெற்றது.

பொலிஸ் 'பான்ட்' வாத்தியக் கோஷ்டியினரும் வந்திருந்தனர். பெருமளவு பொதுமக்களும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர், [க]

## உங்கள் 'ஈழநாடு'

காத்திராப் பிரகாரமாக ஏற்பட்டுவிட்ட சூழ்நிலைகளால் 'ஈழநாடு' இதழை சில தினங்கள் வெளியிட முடியாது போனமை குறித்து ஏற்கனவே வாசகர்களுக்கு வருத்தம் தெரிவித்திருந்தோம்,

இதழின் தோற்றத்தையும் அழகையும் மெருகூட்டி புதுப்பொலிவுடன் வாசகர்முன் சமர்ப்பிக்க நாம் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்த வேளையில் தவிர்க்கமுடியாத நிலைமைகள் உருவாகி எமது முயற்சிகளுக்கு தற்காலிகத்தடை ஏற்பட்டுவிட்டது கவலைக்குரியதே!

எனினும் அபரிமிதமான மக்கள் ஆதரவும், வாசகர்கள், விளம்பரதாரர்களின் அன்பும் எம்மை சோர்வு கொள்ளவிடாமல் எமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள ஊக்கமளிக்கின்றன.

இன்று உங்கள் கையில் தவழும் சிறு அளவிலான இவ்வேடு எமது ஊழியர்களினதும் நிர்வாகிகளினதும் ஒருங்கிணைந்த துரித உழைப்பின் பிரதிபலன் என்பதைக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மிகவிரைவில் 'ஈழநாடு' முன்னைபோல் அழகோடும், பொலிவோடும் வெளிவருவதற்கான மனித முயற்சிகள் யாவும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் சகலரதும் ஒத்துழைப்பு கிடைக்கும் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

— ஆசிரியர்


ஹோம் பினன்ஸ் லிமிட்

கீழ்க்காணும் பொருட்களை மாதாமாதம் கட்டுப்பண முறையில் பெறலாம்.

★ உஷ்ணகாலத்திற்கு உகந்த முதல் தரமான USHA Ceiling Fan (உஷா மின் விசிறி)

★ மேசை மின் விசிறி

★ உயர் தரமான "AIWA" கசற் றேடியோ

★ சைக்கிள்கள்

விபரங்கட்கு:

ஹோம் பினன்ஸ் லிமிட்

82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 8310


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office, Sri Lanka under No. QB 100236/81, P. O. Box 49, Jaffna.